செ.வெ.எண் : 837 நாள் : 13.11.2009

# பத்திரிக்கைச் செய்தி

## தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தலைமையில் சென்னையில் குழந்தைகள் தினவிழா நடைபெற்றது.

தொழிலாளர் துறையின் சார்பில் குழந்தைகள் தினவிழா தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தலைமையில் சென்னை, கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் 13.11.2009 அன்று நடைபெற்றது.

தொழிலாளர் துறையின் சார்பில் நடத்தப்பட்ட குழந்தைகள் தின விழாவில் சென்னை மாநகர மேயர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட ஓவியப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளி குழந்தைகளுக்கு நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்ட குழந்தைகளுக்கு பரிசுகள் மற்றும் தமிழ்நாடு அமைப்புச்சாரா நலவாரிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கினார். இவ்விழாவில் அமைச்சர் பேசியதாவது:

ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் தினவிழா தொழிலாளர் துறை சார்பில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. குழந்தைகளின் உரிமைகளைக் காத்து அவர்கள் கல்வியில தமிழக அரசு பல ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. இதற்காக கொள்கை அளவில் பல்வேறு ஆணைகளை வெளியிட்டு திறம்பட செயல்பட்டு வருகின்றது. படிக்க வேண்டிய வயதில் வேலைக்குச் செல்லும் குழந்தைகளை பணியிலிருந்து விடுவித்து அவர்களுக்கு தரமான கல்வியை அளித்திட 17 மாவட்டங்களில் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தினை மத்திய அரசுடன் இணைந்து நடத்தி வருகின்றது. தமிழகத்தில் தற்பொழுது 505 சிறப்புப் பள்ளிகள் மீட்கப்பட்ட குழந்தைத் தொழிலாளர்களுக்காக நடத்தப்பட்டு வருகின்றன. இதில் சுமார் 17 ஆயிரம் மாணவர்கள் படித்து வருகின்றனர்.

இதுநாள்வரை, இத்திட்டத்தின் மூலம் படித்த சுமார் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குழந்தைகள் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, நல்லமுறையில் படித்து வருகின்றனர். இதில் பலர் சாதனை மாணவர்களாக திகழ்கின்றனர். பலர் கலைக் கல்லூரிகளிலும், பொறியியல் கல்லூரிகளிலும் படித்து வருகின்றனர். பலர் நல்ல வேலை வாய்ப்புகளைப் பெற்று தங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டுள்ளனர்.

தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு தமிழக அரசு இலவச சீருடை, இலவச பேருந்து சலுகை, விடுதி வசதி, போன்ற சலுகைகளை வழங்கி வருகிறது. சிறப்புப் பள்ளிகளில் படித்து, பின் முறையான பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, மேல் வகுப்புகளில் நடைபெற்ற தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் முதல் 50 மாணவர்களுக்கு மாதம் தலா ரூ.250/- ஊக்கத்தொகை வழங்கி உற்சாகப்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அவர்கள் ஏற்கனவே பெறும் மாத கௌரவ ஊதியத்துடன் தலா ரூ.500/- உயர்த்தி வழங்கிட முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிறப்புப் பள்ளிகளில் பணிபுரிகின்ற ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன்களை மேம்படுத்திட வாழ்வியல் திறன் பயிற்சி, அறிவியல் செயல்விளக்கப் பயிற்சிகள் மற்றும் கணிதத்தை உபகரணங்களுடன் கற்பிப்பதற்கான பயிற்சிகள் அன்மையில் நடத்தப்பட்டுள்ளன. மேலும் இதுபோன்ற பயிற்சிகள் இனிவரும் காலங்களில் நடத்தப்படவுள்ளன. குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றும் நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயல்படும் மாவட்ட ஆட்சியர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் சிறப்புப் பள்ளிகளில் சிறப்பாக செயல்படும் ஆசிரியர்களுக்கும் வருடந்தோறும் குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமான ஜூனை 12 அன்று விருதுகள் வழங்கி, கௌரவித்து வருகின்றோம்.

குழந்தைகளை தொழிலில் ஈடுபடுத்துவது சட்டவிரோதமான செயல். தொழிற்சாலைகள், கடைகள் மட்டுமின்றி, வீடுகளில் குழந்தைகளை வேலைக்கு அமர்த்தினாலும் அது சட்டப்படி குற்றமாகும். ஒவ்வொரு மாவட்டத்திலும் பலதுறை அலுவலர்கள் கொண்ட குழு மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டு, மாதம் இருமுறை கூட்டாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. முரண்பாடுகள் காணப்படும் நிறுவனங்கள் மீது கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பல நிறுவனங்களுக்கு ரூ.20,000/- அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த 4 ஆண்டுகளில் தொழிற்சாலைகள், கடைகள், உணவகங்கள் மற்றும் வீடுகள், உட்பட அனைத்து இடங்களிலும் 6,87,576 ஆய்வுகள் தொழிலாளர் துறை மற்றும் தொழிற்சாலைகள் ஆய்வகத்துறை அமுலாக்க அலுவலர்களால் மேற்கொள்ளப் பட்டுள்ளன. 2109 முரண்பாடுகள் கண்டறியப்பட்டு, 1603 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. 916 வழக்குகள் தண்டனையில் முடிவுற்று, ரூ.63,25,425/- அபராதத் தொகையாக விதிக்கப்பட்டுள்ளது. 14 வழக்குகளில் 3 மாத சிறைத் தண்டனையும், 2 வழக்குகளில் 6 மாத சிறை தண்டனையும் 1 வழக்கில் 1 வருட சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. 1804 குழந்தைத் தொழிலாளர்கள் பணியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். 834 குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதர 970 குழந்தைத் தொழிலாளர்கள் அவர்களது பெற்றோர்களிடம் உரிய அறிவுரைகளுடன் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

விழாவில் கலந்து கொண்டு தலைமையுரையாற்றிய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் முதன்மைச் செயலர் டாக்டர் டி.பிரபாகர ராவ், இ.ஆ.ப., அவர்கள் பேசுகையில், தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்றிட புதுமையான முறையில் விழிப்புணர்வு செயல்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றும் தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டத்தின்கீழ் குழந்தைத் தொழிலாளர் குடும்பங்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தக் குடும்பங்களுக்கு அரசு நலத்திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகின்றது என்றும் தெரிவித்தார்.

மேலும், குழந்தைத் தொழிலாளர் கண்காணித்தல் முறை (Child Labour Monitoring System) அறிமுகம் செய்யப்பட்டு, அதற்காக பயிற்சிகள் அனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் நிலையை அகற்றுவது குறித்த மக்கள் பிரதிநிதிகளுக்கான பயிற்சி முகாம் நடைபெற்றுள்ளன என்றும் Unicef உதவியுடன் தர்மபுரி, சேலம் மாவட்டங்களில் பருத்தி தொழிலில் ஈடுபடும் குழந்தைகளை மீட்டெடுத்து கல்வி மற்றும் சுகாதார உதவி வழங்கிட Cotton Seed Project 4.11.2009 அன்று துவங்கப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் நிலையை அகற்றிட மாநில அளவில்

பல்வேறு துறைகளின் உயர் அலுவலர்கள் அடங்கிய உயர் மட்டக் குழு கூட்டம் நடத்தப்பட்டு, பணிகள் ஆய்வு செய்யப்படுகின்றன. குழந்தைத் தொழிலாளர்கள் உடனுக்குடன் கண்டறியப்பட்டு மறுவாழ்வு அளிப்பதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும் முதன்மைச் செயலர் குறிப்பிட்டார்.

குழந்தைகள் தின விழாவின் ஒரு பகுதியாக திருநெல்வேலி, ஈரோடு மற்றும் சென்னை மாவட்டங்களைச் சேர்ந்த தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்ட சிறப்புப் பள்ளி குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகளும், நாடகங்களும் நடத்தப்பட்டன.

இவ்விழாவில் தொழிற்சாலைகள் தலைமை ஆய்வர் திரு.ரகுநாதன், Unicef நிறுவனத்தின் பிரதிநிதிகள், தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகள் துறைகளைச் சேர்ந்த அரசு அலுவலர்கள், சென்னை மாநகராட்சி பள்ளிக் குழந்தைகள், தொண்டு நிறுவனம் மற்றும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் ஓவியப் போட்டிகளில் வெற்றிப்பெற்ற குழந்தைகளுக்கும், கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அமைப்புச் சாரா நலவாரிய உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது. விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் தொழிலாளர் துறை ஆணையர் திரு.அ.சுகுமாரன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். கூடுதல் தொழிலாளர் ஆணையர் திரு. ப. கருப்பசாமி அவர்கள் நன்றியுரை வழங்கினார்.



வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9